**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.49/2025- PW-2**

| | |
|---|---|
| Name | திரு. கிருஷ்ணன் |
| Husband/Father Name | புடத்தவாடன் |
| Village /Area | பொன்னை |
| Taluk | காட்பாடி |
| Occupation | நடத்துநர் |
| Age | 49 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 06.10.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 14.01.2025 அன்று ஆற்காட்டில் இருந்து பொன்னை வழித்தடத்தில் 11-A வாகன எண். TN 23 N-2371 என்ற பதிவெண் கொண்ட பேருந்தில் நடத்துநராக ஆற்காட்டில் இருந்து பொன்னை வழித்தடமாக பணியில் இருந்தேன். கீரை சாத்து என்ன கிராமத்தில் இரவு தங்கல் செய்வதற்காக நானும் ஓட்டுநர் பார்த்திபனும் பள்ளியின் அருகே இரவு 09.00 மணியளவில் பேருந்தை நிறுத்திவிட்டு டிக்கெட் கொடுக்கும் இயந்திரத்தை சார்ஜ் செய்துக்கொண்டிருந்தோம். அப்போது ராஜேஷ் மற்றும் இராஜவேல் என்பவர்கள் இங்கு எதற்காக பேருந்தை நிறுத்தியுள்ளீர்கள் என்று கேட்டார்கள் அப்போது நாங்கள் பேசிக்கொண்டிருந்த போது டமால் என்று சத்தம் கேட்டது. நானும் ஓட்டுநர் பார்த்திபனும் பேருந்தை பார்த்தோம். அப்போது பேருந்தின் முன் பக்கக் கண்ணாடி உடைக்கப்பட்டிருந்தது. உடைந்த முன்பக்க

கண்ணாடியின் மதிப்பு ரூ.12,500/- இருக்கும். இது சம்பந்தமாக ஓட்டுநர் பார்த்திபன் பொன்னை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக பொன்னை காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் 13 ஆண்டுகளாக பணி செய்து வருகிறேன். நான் நிரந்திர பணியாளர் தான். சம்பவ தினத்தன்று என்னுடன் பணியில் இருந்தவர் ஓட்டுநர் பார்த்திபன் ஆவார். நாங்கள் பொன்னை to ஆற்காடு வழித்தடத்தில் பேருந்தை வழக்கமாக இரவு 09.00 மணியளவில் பேருந்தை நிறுத்துவோம். சம்பவம் இரவு 09.30 மணியளவில் நடைபெற்றது. எதிரி கண்ணாடியை உடைத்ததை நான் நேரில் பார்க்கவில்லை. சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. நான் சத்தம் கேட்ட பிறகு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன். கண்ணாடியை யார் உடைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவ தினத்திற்கு 3 நாட்களுக்கு முன்பு அந்த அங்கன்வாடி பள்ளியின் அமைப்பாளர் அந்த பள்ளியில் மது பாட்டில்கள் கிடந்ததகாவும் அதை ஊர் பொதுமக்களிடம் தெரிவித்ததாகவும், அதனை எதிரியும் ஊர் மக்களும் சேர்ந்து அதற்கு முன்பு பணிபுரிந்த ஓட்டுநர், நடத்துநர் ஆகியோர்களிடம் அங்கு தங்க வேண்டாம் என்றும் எதிர்ப்பு தெரிவித்த விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் விசாரித்ததன் அடிப்படையில் எனக்கு தெரியவந்தது. அசா.1 ஏற்கனவே மேற்படி சம்பவம் தொடர்பாக எதிரி தான் பேருந்தின் கண்ணாடியை உடைத்திருப்பார் என்று ஒரு யுகத்தின் அடிப்படையில் தான் புகார் கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். போலீசார் கூறியதன் அடிப்படையில் தான் நான் போலீஸ் விசாரணையில்

கூறியுள்ளளேன் என்று சொன்னால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் போலீசாரின் அழுத்தத்திற்கு இணங்க  சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.06 16:08:02 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.